For all Ceremonies
At your homes
Our service available.

OLI ILLAM
210, Main Street,
[Near St. James Church]
Jaffna.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

உங்கள் இல்லங்களில் நடைபெறும் எந்த வைபவங்களுக்கும் எமது சேவையைப் பெறுங்கள்.

ஒளி இல்லம்
210, பிரதான வீதி,
[சென். ஜேம்ஸ் ஆலய அருகில்]
யாழ்ப்பாணம்.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 03 செவ்வாய்க்கிழமை (16 03·1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 109

# தமிழ் மக்களை அழித்துக் கொண்டு சிங்கள அரசு தார்மீகம் பேசுகிறது

## விடுதலைப் புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 16

தமிழ் மக்களை அழித்துக்கொண்டு, அந்த அழிவில்தான் சிங்கள அரசு தார்மீகம் பேசுகின்றது. தர்மத்தின் அடிப்படையில் போராடும் எம்மை களங்கப்படுத்துகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு — அம்பாறை மாவட்ட அரசியல்துறை வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 27 ஆம் திகதி வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள திகலிவெட்டைப் பிரதேசத்தில் சிங்கள இராணுவத்தால் ஆறு தமிழர்கள் கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டமை குறித்து அந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

தமிழின அழிப்பில் ஈடுபட்டுள்ள சிங்கள அரசு, இவ்வாறான படுகொலைகளைப் புரிந்துவிட்டு, தனது மக்கள் தொடர்புச் சாதனங்களில் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது.

அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி தொழிற்சாலைகளைத் திறந்து கொண்டிருக்கின்ற அதேவேளையிலேதான், இங்கு தமிழ்த் தொழிலாளர்கள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இதுதான் சிங்கள அரசின் நிலைப்பாடு என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சிங்கள அரசின் கொடூரமான படுகொலைகளில் இருந்து எமது மக்களைப் பாதுகாப்பதுதான் எமது பணியா

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலையில் 3 பொலிஸார் பலி!

### மற்றும் இருவர் காயம்

மன்னார் மாவட்டத்தில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பேசாலைப் பகுதியில் ரோந்துசென்ற ஸ்ரீலங்கா பொலிஸார் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று பொலிஸார் கொல்லப்பட்டனர்; மற்றும் இரு பொலிஸார் காயமடைந்தனர்.

ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த ஜனவரிமாதம் 22 ஆம் திகதியும் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பேசாலையில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு பொலிஸார் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ-3-6)

## மொறவேவாவில் கடும் மோதல்!

திருகோணமலை மாவட்டம்-மொறவேவா காட்டுப் பகுதியில் அரசு படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் மோதல்இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுப்படைத் தலைமையகம் இதனைத் தெரிவித்ததாக இலங்கை வானொலி அறிவித்தது.

பேசாலையில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் இடம் பெறுவதற்கு சிறிது முன்னர் மொறவேவா தாக்குதல் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஏற்பட்ட சேதங்கள் குறித்து விரிவான தகவல்கள் கிடைக்கவில்லை. (உ-எ)

## 'வாதுவ' நாளை வந்து சேரும்

கொழும்பில் இருந்து புறப்பட்ட ''வாதுவ'' கப்பல் தற்போது திருகோணமலையில் தரித்து நிற்பதாக நேற்று யாழ்ப்பாணத்துக்குத் தகவல் கிடைத்தது.

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் ''குமண'' கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் இன்று முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அது முடிவடைந்ததும், கொழும்புக்குச் செல்லும் அரச ஊழியர்களை ஏற்றிக் கொண்டு ''குமண'' திருகோணமலை நோக்கிப் புறப்படும்.

திருகோணமலையில் தரித்து நிற்கும் ''வாதுவ'' அங்கிருந்து புறப்பட்டு பெரும்பாலும் நாளை பருத்தித் துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் எடுத்து வரப்படும் பொருள்களின் பட்டியல் நேற்று வரை இங்கு கிடைக்கவில்லை. இக்கப்பலில் 500 பரல் மண்எண்ணெயும் மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான பொருள்களும் எடுத்து வரப்படவிருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (உ-3)

## தீவுப்பகுதியைப் பார்வையிட யாழ். ஆயர் புறப்பட்டார்

குருநகர், மார்ச் 16

யாழ். ஆயராகப் பதவி ஏற்றுக் கொண்ட பின்பு முதல் தடவையாக வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தீவுப் பகுதியைப் பார்வையிடுவதற்காக நேற்று அங்கு புறப்பட்டுச் சென்றார்.

நேற்று பிற்பகல் பருத்தித் துறையில் இருந்து கப்பல் மூலமாக அவர் காங்கேசன் துறைக்கு புறப்பட்டார். அங்கிருந்து அவர் தீவுப் பகுதிக்குச் செல்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆயருடன் யாழ். மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலைய பொறுப்பதிகாரி வண. எம். ஈ. பயஸ் அடிகளாரும் தீவுப்பகுதிக்குச் சென்றுள்ளார். (உ-51)

## 7 வேங்கைகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 16

இளாலிக் கடற்பரப்பில் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி நடந்த நேரடி மோதலின்போது 7 போராளிகள் வீரமரணமடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

வீரமரணமடைந்த போராளிகள் விவரம் வருமாறு:-

★ மேஜர் பூபால் (சிவசுப்பிரமணியம் சிவகுமார் - கிறீன் வீதி, திருகோணமலை)

★ கப்டன் புரவலன் அல்லது சசாங்கன் (வெள்ளைக்குட்டி பூபாலப்பிள்ளை தம்பலவத்தை, மண்டூர், மட்டக்களப்பு)

★ கப்டன் மகேஸ் (மகேஸ்வரன் அருள்ராஜா - உறுகாமம், கரடியனாறு, மட்டக்களப்பு)

★ கப்டன் மகேஸ்வரன் அல்லது மகேஸ் (குலசிங்கம் ஸ்ரீயன் டெல்மன்-உவர்மலை, திருகோணமலை)

★ கடற்புலி கப்டன் அறி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரிப் பாதை விவகாரம்: கொழும்பில் பேச்சுக்கள்

பூநகரிப் பாதை ஊடாக யாழ். குடாநாட்டுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வருவது குறித்து அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள் ஸ்ரீலங்கா அரசுத் தரப்புடன் கடந்த வியாழனன்று கொழும்பில் பேச்சு நடத்தினர்.

அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தின் சார்பில டாக்டர் பீற்றர் நிக்கிலஸ்ஸும், அரச தரப்பில் அரசின் உயர் அதிகாரிகளும் இராணுவ உயரதிகாரிகளும் இப்பேச்சுகளில் பங்குபற்றினர்.

இப்பேச்சுகளின்போது—

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் கண்காணிப்புடன் வாகன அணி மூலம் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை பூநகரிப் பாதையூடாக எடுத்து வருவதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்திருப்பது குறித்து அகதிகளுக்கான ஐ. நா. தூதரகப் பிரதிநிதி எடுத்துக் கூறியதாக அறிவிக்கப்பட்டது.

எனினும் இப்பேச்சுகளின் பெறுபேறுகள் குறித்து தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (உ-3)

## அமைச்சரவையும் ஆராயும்?

கொழும்பு, மார்ச் 16

பூநகரிப் பாதை விடயம் குறித்து அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிக்கும் ஸ்ரீலங்கா அரசின் உயர் அதிகாரிகளுக்கும் இடையில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற பேச்சுகள் குறித்து, நாளை கூடவிருக்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படலாம் எனக் கருதப்படுகிறது.

நாளை மறுதினம் கொழும்பில் நடைபெறும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவை முடிவுகள் குறித்து தகவல் வெளியிடும் போது, பூநகரிப் பாதை தொடர்பாக அரசின் நிலைப்பாடும் வெளியிடப்படக் கூடும் என்றும் கருதப்பட்டது. [உ]

## பீரங்கித் தாக்கு

தென்மராட்சி, மார்ச் 16

நேற்று காலை 9 மணியளவில் இளாலிக் கடல் பரப்பிலிருந்து பீரங்கிப் படகு ஒன்று கறுக்காய் வெளிப் பகுதியை நோக்கி சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகமும் ஷெல் வீச்சும் நடத்தியது.

ஷெல்கள் இப்பகுதியிலுள்ள பற்றைக் காடுகளில் வீழ்ந்து வெடித்ததால் சேதம் ஏதும் ஏற்படவில்லை. [உ-117]

## எதிர்க்கட்சிக் கூட்டணிக்கு தேர்தல் சின்னம் கதிரை!

கொழும்பு, மார்ச் 16

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஐந்து எதிர்க்கட்சிகள் சேர்ந்து அமைத்திருக்கும் ''பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைத்'' தேர்தல் ஆணையாளர், ஒரு கட்சியாகப் பதிவு செய்து அங்கீகரித்துள்ளார் என்றும்—

முன்னணியின் தேர்தல் சின்னமாகக் ''கதிரை'' ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் ஸ்ரீ. ல. சு. க. யின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

ஸ்ரீ.ல.சு.க. யின் தலைவியும், எதிர்க்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவே புதிய முன்னணியின் தலைவியாகச் செயற்படுவார் என்றும்—

ஸ்ரீ.ல.சு.கட்சி எம் பியான டி. எம். ஜெயரத்தின முன்னணியின் செயலாளராகப்பணி புரிவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விரைவில் நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தலிலும் பின்னர் ஜனாதிபதித் தேர்தலிலும் இந்த முன்னணி போட்டியிடும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-6)

## வெளியூர் தபால்களை உடன் பெட்டிகளில் சேர்க்குக!

நாளை மறுதினம் திருமலை செல்லும் ''குமண'' கப்பலில் தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்பட உள்ளன.

அதனால் வெளியூர்களுக்கான தபால்களைப் போட விரும்புபவர்கள் அவற்றை—

யாழ். பிரதம தபாலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தபால் பெட்டிகளில் நாளை நண்பகல் 12-30 மணிக்கு முன்பாகவும்—

ஏனைய இடங்களில் உள்ள பெட்டிகளில் நாளை காலை 9 மணிக்கு முன்பாகவும் சேர்க்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

கப்பல் புறப்படும் நேரத்தில் திடீர் மாற்றம் செய்யப்பட்டால் கடிதங்களை உடனடியாகத் தபால் பெட்டிகளிலிருந்து சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்—

எனவே இறுதி நேரம் வரைக் காத்திராது நேரத்துடன் தபால்களைச் சேர்க்கும் படியும் கேட்கப்பட்டிருக்கிறது. (உ-162)

## வடபிராந்திய பதிவாளர் பணிமனை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 16

வடபிராந்தியத்துக்கென பதிவாளர் நாயகம் அலுவலகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் திறக்க அனுமதி கிடைத்திருக்கிறது. இந்த அலுவலகம் விரைவில் யாழ்ப்பாணத்தில் இயங்க இருப்பதாகத் தெரிய வருகிறது.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, பருத்தித்துறை ஆகிய மாவட்டங்களுக்கான பதிவு வேலைகள் இனி யாழ்ப்பாணத்தில் அமையும் அலுவலகத்திலேயே மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

பிந்திய மரணச் சான்றிதழ், பிந்திய பிறப்புச் சான்றிதழ் ஆகியன வழங்கும் வேலைகள் இனி இந்த அலுவலகத்திலேயே மேற்கொள்ளப்படவிருக்கிறது.

காலம் தாழ்த்திய பிறப்பு, இறப்பு பதிவு வேலைகள் தற்சமயம் கொழும்பில் மேற்கொள்ளப்படுவதால், அப்பதிவுகளுக்காக நீண்டகாலம் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

புதிய அலுவலகம் இயங்க ஆரம்பித்ததும் உடனுக்குடன் பிந்திய பதிவுகளை மேற்கொள்ள வசதி கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்போது யாழ். மாவட்டக் காணிப் பதிவாளராகவும், மேலதிக மாவட்ட பதிவாளராகவும் கடமையாற்றும் திரு. ஜே. என். போமன் பிராந்திய பதிவாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார். (உ-6)

## 'உதயன்' வெற்றிக்கிண்ணத்துக்கான உடற்பயிற்சிப் போட்டிகள் நாளை சென். ஜோன்ஸில்

யாழ்ப்பாணம், மார்ச் 16

''உதயன்'' ''அர்ச்சுனா'' வெற்றிக் கிண்ணங்களுக்கான — உதயன் நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். கல்வித் திணைக்களம், யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடத்தி வரும் உடற்பயிற்சிப் போட்டியின் இறுதி நிலைப் போட்டிகள் நாளை காலை 8 மணி முதல் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

கோட்டமட்டப் போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற அணிகள் நாளைய இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளவிருக்கின்றன. சுமார் மூவாயிரம் மாணவர்கள் நாளைய போட்டிகளில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வெற்றிபெறும் அணிகளுக்கு உதயன் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படவிருக்கின்றன. விசேட பரிசில்களாக தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு ஒவ்வொரு பிரிவிலும் முதலிடத்தைப் பெறும் அணிக்கு 3

(3 ஆம் பக்கம் பார்க்க)

### பாடசாலைகள் நாளை அரைநேரம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

நாளை சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறும் யாழ். மாவட்டப் பாடசாலைகள் உடற்பயிற்சிப் போட்டியை ஒட்டி யாழ். மாவட்டப் பாடசாலைகள் அனைத்தும் நாளை நண்பகல் 12-30 மணியுடன் மூடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


**விற்பனைக்கு**

திருநெல்வேலியில் மூன்று பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: M. செல்வரத்தினம், புதிய இல. 183, நாலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [24835]

**விற்பனையாகின்றன**

எம்மிடம் தெய்வீக நூல்கள், பாடசாலைப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள் ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் ஆகியன விற்பனையாகின்றன. சோதிட விலாச புத்தகசாலை, 46, பெரிய கடை, யாழ்ப்பாணம், சோதிட பிரகாச இயந்திரசாலை, கொக்குவில். (6049)

**திருத்தவேலைகள்**

கடிகாரங்கள் திருத்துதல் வேலைகள் உத்தரவாதத்துடன் தொடர்ச்சியாக மேற்கொள்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் "அல்டி" நிறுவனம் தெரிவித்துக் கொள்கின்றது. சி-4712)

**தேவை**

யாழ். நகரில் பிரபல்யம் வாய்ந்த Computer நிறுவனம் ஒன்றிற்கு Computer Instructor தேவை. தொடர்பு இல. 891, மே/பா, உதயன். (சி-4711)

**செயல்நூல் ஆண்டு - 7**

"வரலாறும் சமூகக்கல்வியும்" வெளிவந்துவிட்டது. 500 வினா - விடைகள், செயற்பாடுகளுக்கு விடைகள். நான்கு மாதிரித் தவணைப் பரீட்சை வினாத் தாள்கள், (முதலாம் தவணைக்கு இரண்டு) விடைகளுடன், ஆக்கம்: நா. மயில்வாகனம், சென்ஜோன்ஸ் கல்லூரி. விலை ரூபா 32/- புத்தகசாலைகளில் பெறலாம். [24346]


## உயர் நீதிமன்ற கமிஷனர்

கொழும்பு, மார்ச் 16

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. பாலவடிவேல் இம்மாகாணத்தின் உயர்நீதிமன்ற கமிஷனராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை உயர் நீதிமன்றங்களில் இவர் தலைமை வகிப்பார். (க)

## இனந்தெரியாத சடலம்

கொழும்பு மார்ச் 16

வெள்ளவத்தை ராமகிருஷ்ண மிஷனுக்கு அருகில் 52 வயது மதிக்கத்தக்க இனந்தெரியாத நபர் ஒருவரின் சடலத்தை வெள்ளவத்தைப் பொலீஸார் ஞாயிறு பிற்பகல் கண்டெடுத்து, பொலீஸ் சவச்சாலையில் வைத்துள்ளனர்

இவ்வாறு கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது (த-எ)

## இரகசிய வாக்கெடுப்பு

கொழும்பு மார்ச் 16

பிரேமதாச சபையின் தலைவர் உறுப்பினர்களும் இனிமேல் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் பொது மக்களால் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் —

இதற்கான சட்டத்திருத்தம் விரைவில் கொண்டுவரப்படும் என்றும் — அமைச்சர் வெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார். (த-எ)


உ

இலக்கிய கலாநிதி
**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**
அவர்களின்

**பிறந்ததின, நினைவுதின நிகழ்வுகள்**

1. பேச்சுப்போட்டி:
ஆண்டு 13 வரை கற்றுக் கொண்டு இருக்கும் மாணவர்களுக்கு மட்டும் உரியது.
தலைப்பு: "இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பணிகள்"

2. கட்டுரைப் போட்டி:
பாடசாலை மாணவர்கள் அல்லாதவர்களுக்கு உரியது.
தலைப்பு: "இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் சைவ தமிழ்ப்பணி பற்றிய ஒரு நோக்கு"

இரு போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பெற உள்ளன.

விண்ணப்பப் படிவங்களையும் ஏனைய விவரங்களையும் அ. பஞ்சாட்சரம் காரியதரிசி, பண்டிதமணி நூல்வெளியீட்டுச்சபை, உரும்பராய் என்ற விலாசத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

பண்டிதை பொன். பாக்கியம், தலைவர்.
அ. பஞ்சாட்சரம், காரியதரிசி.
பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை, உரும்பராய்.
(24830)

**யாழ். இந்து பழைய சாரணர்களுக்கு**

சாரணர் குழுவினரின் 75ஆவது ஆண்டு நிறைவு மலரில் முன்னாள் சாரணர்களை இடம்பெறச் செய்ய முழுப்பெயர், தொழில், முகவரி, சாரணராகவிருந்த காலம் ஆகியவற்றை அதிபருக்கு கூடிய விரைவில் அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றேன்.

சாரணர்குழுத் தலைவர்.

யாழ். இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(24851)

சில்லாலை
**அத்தனாசியார் பிரதம வைத்தியசாலை**
**14 — 03 — 1993** தொடக்கம்
இடம்: 124, ஆடியபாதம் வீதி, நல்லூர்,
(கல்வியங்காடு சந்தியிலிருந்து 100 மீற்றர்)
S. சுப்பிரமணியம் கொம்பனி முன்பாக)

சிகிச்சை நேரம்:
காலை 7-00 மணி — 1-00 மணி
பி. ப. 3-30 மணி — 6-00 மணி
(ஞாயிறு பிற்பகல் லீவு நாள்)

வைத்திய கலாநிதி,
எமில் அத்தனாசியார்.
(6051)


**31ஆம் நாள் நினைவஞ்சலி**

**அமரர் P. J. அல்பேட்**
(முன்னாள் சூ சமா முனிவர் அச்சக லிகிதர்)

மறைவு: 15 02 — 1993

இன்றெமக்கு வழிகாட்ட யாருமே இல்லை
இருளகற்றி ஒளியூட்ட விளக்கே இல்லை
துன்பக்கடலில் சிக்கி நாம் தவிக்கையில்
துயர் தீர்த்துக் கரை சேர்க்கத் தந்தையில்லை
பொன்றும் வெயிலில் நாம் நடந்து செல்கையில்
பொறுத்தாற ஒரு நிழல்கூட இல்லை
எந்நாளும் நாங்கள் ஏங்கி அழுதாலும்
எம்கண்ணீர் மாற்றுவார் இல்லை ஐயா!
அன்பு ஐயா! அமலன் பேசு அருகிருந்து
எம் துன்பம் நீங்க வேண்டிடுவீர்!

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக. நாளை (17-03-1993 புதன்கிழமை காலை 6 – 15 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

இன்னும், எமது தந்தையாரின் மரணச் சடங்கின் போது வருகை தந்தும், மலர் வளையங்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், வேறு பல விதங்களில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைப் பணிவன்புடன் நவில்கிறோம்.

பிள்ளைகள், மருகர், பேரர்.

யாழ்ப்பாணம். (24834)

## பாடசாலைகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 16

பெரியபுலம் மகா வித்தியாலயமும், வேலணை சரஸ்வதி வித்தியாலயமும் இணைந்து நடத்தும் கல்விக் கண்காட்சி நாளை முதல் வெள்ளிக்கிழமை வரை தினசரி காலை 8-30 மணி முதல் மாலை 5-30 மணி வரை பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். ஆரம்ப நிகழ்ச்சிகளில் முதன்மை விருந்தினராக வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கலந்து கொள்வார். (உ)

o o o

தென்மராட்சி, மார்ச் 16

சாவகச்சேரி இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று கல்லூரி மைதானத்தில் அதிபர் க. சந்திரசேகரா தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்விக் கோட்டப் பிரதிப் பணிப்பாளர் பொ. வீரபத்திரன், தென்மராட்சி பிரதேச செயலாளர் பு. சுந்தரம்பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்வர். இக்கல்லூரியின் பழைய மாணவர்களான யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, தென்மராட்சி தளபதி திரு. பரணி ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (உ-117)

# எம்.எல்.ஏ. மீது தாக்குதல்: திட்டமிடப்பட்ட நாடகம்

## ஜெயலலிதா சட்ட சபையில் அறிவிப்பு

சென்னை, மார்ச் 16

காங்கிரஸ் உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் மீது நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதல் காங்கிரஸாரே திட்டமிட்டு நடத்திய நாடகமாக இருந்திருக்கலாம். இப்படி எனக்குத் தகவல் கிடைத்துள்ளது.

— முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று தமிழக சட்டசபையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை சட்டசபை உறுப்பினர் விடுதியில் வைத்து தாம் தாக்கப்பட்டது தொடர்பாக பீட்டர் அல்போன்ஸ் நேற்று சட்டசபையில் பேசினார். அப்போது அவர், தாம் அ. தி. மு. கவினரால் பயமுறுத்தப்பட்ட பல சம்பவங்களை விவரித்தார்.

சம்பந்தமில்லாத விஷயங்களை உறுப்பினர் தெரிவிப்பதாக அ. தி. மு. க. உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். சபாநாயகரும் அ. தி. மு. க. உறுப்பினர்களின் எதிர்ப்புக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டார்.

அதற்கு காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து இரு தரப்பு உறுப்பினர்களும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

45 நிமிடங்கள் இதனால் சபையில் கூச்சலும் குழப்பமும் நிலவியது.

பதற்றத்தைத் தணிக்கமுதலமைச்சர் ஜெயலலிதா குறுக்கிட்டு —

"எனக்குக் கிடைத்த தகவல்களின்படி, அல்போன்ஸைத் தாக்கியவர்களில் ஒருவரான சுதாகர் கோபாலுக்கும், அல்போன்ஸுக்கும் ஏற்கனவே தொடர்பு இருந்திருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது."

"அ. தி. மு. க. அரசு மீது காங்கிரஸ் வேண்டும் என்றே பழி சுமத்த இப்படி ஒரு நாடகத்தை நடத்தி இருக்கலாம்" — என்று தெரிவித்தார்.

முதலமைச்சரின் குற்றச்சாட்டுக்கு காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து இரு தரப்பு உறுப்பினர்களும் பரஸ்பரம் கூச்சலிட்டனர்.

இறுதியில் பீட்டர் அல்போன்ஸின் உரிமை மீறல் தொடர்பான மனு மீது சகல தகவல்களையும் சேகரித்த பின்னர் தீர்ப்பு வழங்குவதாக சபாநாயகர் கூறினார்.

அதனைத் தொடர்ந்து சபையில் அமைதி நிலவியது.

### உடைத்த நிலையில் வந்த

## 400 தபால்கள் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 16

'குமண' கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால்களில் உடைந்த நிலையில் வந்த சுமார் 400 வெளிநாட்டுத் தபால்கள் உரியவர்களால் பொறுப்பேற்கப்படாமல் தபாலகத்தில் தேங்கிக் கிடப்பதாக தெரிவிக்கப்பட்டது.

மேற்படி தபால்களில் காணப்பட்ட விலாசதாரர்களுக்கு அடையாள அட்டையுடன் வந்து தபால்களைப் பொறுப்பேற்கும்படி தனித் தனியாக கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## குருநகரில் வயிற்றோட்டம்; மாநகரசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 16

குருநகர்ப்பகுதியில் வயிற்றோட்ட நோய் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து யாழ். மாநகர சபை முன்எச்சரிக்கை நடவடிக்கை எடுத்துள்ளது.

சுகாதாரப்பிரிவு அதிகாரிகள் கொண்ட குழுக்கள் அங்கு வீடுவீடாகச் சென்று நோய் பரவும் காரணிகளை ஆராய்ந்து வருகின்றனர்.

மலசலகூடம் அமைத்தல், குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தல், வடிகால்கள் துப்புரவு செய்தல் போன்ற பணிகளில் இக்குழுக்கள் இருவாரங்கள் ஈடுபடும். (த-3)

### கூட்டணியை தொடரும் முயற்சியால்

## தமிழ்நாட்டு மக்களை காங்கிரஸ் குழப்புகிறது!

### கம்யூனிஸ்ட் கட்சி தெரிவிப்பு

சென்னை, மார்ச் 16

இந்திரா காங்கிரஸுடனான கூட்டணி முறிவடைந்துவிட்டதாக அ. தி. மு. க. அறிவித்த பின்பும், அந்தக் கூட்டணியைப் பராமரிக்க இந்திரா காங்கிரஸ் முயற்சி செய்வது தமிழக மக்களை குழப்பம் அடையச் செய்துள்ளது.

அகில இந்திய மார்க்ஸியக் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் ஹரிகிஷன் சிங் சுர்ஜித் முன்கண்டவாறு தெரிவித்தார்.

வடமாநிலங்களில் பாரதீய ஜனதாக் கட்சி பல வகுப்புவாதப்பிரச்சினைகள் எழக் காரணமாக இருந்துள்ளது என்றும்—

தமிழ்நாட்டில் அ. தி. மு. க.— பாரதீய ஜனதா கூட்டணி ஏற்பட்டால் இங்கும் வகுப்புவாதப் பிரச்சினை ஏற்படும் என்றும் அவர் தஞ்சாவூரில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். (த-எ)

### நாகப்பட்டினம் அருகே

## இயந்திர மீன்பிடிப் படகை பொலீஸார் கைப்பற்றினர்

சென்னை, மார்ச் 15

நாகப்பட்டினம் அருகே இயந்திர மீன்பிடிப்படகு ஒன்றையும் பதுக்கிவைக்கப்பட்டிருந்த என்ஜின் ஒயிலையும் பொலீஸார் கைப்பற்றினார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஒருவரை சுங்கத் திணைக்கள அதிகாரி ஒருவர் கைதுசெய்து விசாரித்தபோது, கோடிக்கரையில் இருந்து இலங்கைக்குப் பொருள்களை எடுத்துச் செல்வதற்காக இலங்கைப் பிரஜை ஒருவர் தம்மை அமர்த்தியதாக அவர் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து படகு பறிமுதல் செய்யப்பட்டது.

பின்னர் சுங்க அதிகாரிகள் உஷார் நடவடிக்கைகளை கடுமையாக மேற்கொண்டனர். என்றும்—

அப்போது நாகப்பட்டினம் அருகே நான்கு வீடுகளின் பின்புறம் புதைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 450 ரின் என்ஜின் ஒயில் கைப்பற்றப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

திருத்துறைப்பூண்டியில் ஒரு வீட்டில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த 150 ரின் என்ஜின் ஒயில் பறிமுதல் செய்யப்பட்டது அது தொடர்பாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். என்றும் தெரிவிக்கப்பட்டது (த-எ)

## கொழும்பில் குழு மோதல்; ஒருவர் சுட்டுக் கொலை

கொழும்பு, மார்ச் 16

கொழும்பில் கடத்தல் வியாபாரக் கோஷ்டிகளுக்கு இடையே ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் பொதுமகன் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இரு கோஷ்டிகளும் பரஸ்பரம் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டபோது இறந்தவர் இடையில் அகப்பட்டு உயிரிழந்தார்.

கொம்பனித்தெரு ரயில் நிலையம் அருகில் கடந்த சனிக்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றது. (த-எ)


யாழ். நகரில்
பற்களை சிறந்தமுறையில் கட்டிக் கொள்ளவும்



கண்களுக்கு உகந்தகண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்
**பி. ஜ. பர்னான்டோ**
542, ஆஸ்பத்திரி வீதி,
(யாழ். போதனா வைத்தியசாலை எதிரில்)
யாழ்ப்பாணம், (4687)

**I. A. S. கலை, விஞ்ஞான கல்வி நிலையம்**
அச்சுவேலி.

**A/L 93 கலை, வர்த்தக**
வினா விடை வகுப்புகள்
(சனி - ஞாயிறு)

| | | |
|---|---|---|
| பொருளியல் - | இராஜேஸ்வரன் | 12 - 1 |
| கணக்கியல் - | கலைச்செல்வன் | 2 - 3 |
| வர்த்தகம் - | சிவப்பிரகாசம் | 9 - 10 |
| அளவையியல் - | சத்தியசீலன் | 8 - 9 |
| தமிழ் - | கோப்பாய் சிவம் | 10 - 11 |
| இந்துநாகரிகம் - | ஸ்ரீ | 8 - 9 |
| புவியியல் - | பிரபாகரன் | 11 - 12 |

(24849)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## இதென்ன புதிய உத்தி?

அரசாங்கத்தின் முழு நோக்கமும் வடக்கு - கிழக்கில் யுத்தத்தைத் தீவிரப்படுத்துவதே என்பது இப்போது மிகமிகத் தெளிவாகி உள்ளது. அரசியல் தீர்வு என்பதும், தெரிவுக்குழு என்பதும் வெறும் போலி வார்த்தைகளே என்பது இலகுவில் நிரூபணமாகின்றது.

தெரிவுக்குழு முன்வைத்திருக்கும் தீர்வை — இருபது மாதங்களாக அது நொந்து சுமந்து பெற்றெடுத்த தீர்வை — சனநாயக வழிக்குத் திரும்பியதாகக் கூறிக்கொண்ட சகல தமிழ்க் கட்சிகளுமே நிராகரித்து விட்டன. இத்தகைய ஒரு சூழ்நிலையில், தான் நினைத்தவாறு ஒரு தீர்வை தமிழர்களை ஏற்றுக்கொள்ளச் செய்ய இயலாது என்பது பிரேமதாசாவுக்கு நன்றாகப் புரிந்திருக்கிறது.

ஆகையால் தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை நாடும் அவரது உண்மையான விருப்பம் மேலும் தீவிரமுற்று வைரமாகி, நிலைகொள்வது இயல்பே! அதனால்தான் அவர் கிழக்கில் — தென் தமிழீழத்தில் — தரை வழித் தாக்குதலை கடுமையாக முடுக்கிவிடவும், வடதமிழீழத்தில் யுத்த களம் சோடை போகாதிருக்க விமானத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தித் தொடரவும் புதிய உத்தி சமைத்திருக்கிறார்!

பிரேமதாசா பலே பேர்வழி! தென் தமிழீழத்தின் மீது சிங்களவர்களுக்கு எப்போதுமே ஒரு கண். சுதந்திரம் கிடைத்த நாளிலிருந்தே சிங்களத் தலைவர்களுக்கு அதன் மீது கண் விழுந்து விட்டது அதனையும் ஏனைய ஏழு மாகாணங்களையும் போல ஒரு சிங்களப் பெரும்பான்மை மாகாண மாக்கிவிட வேண்டும் என்பது அவர்களின் மனமார்ந்த ஆசை. அந்த ஆசையின் ஆரம்பமே தென் தமிழீழத்தில் தொடங்கப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள். சிங்களப் பேரினவாதத்தின் அந்தப் பெரும் ஆசையைப் பூர்த்தி செய்யும் தலைவனாக விளங்கவேண்டும் என்று பிரேமதாசா விரும்புவார் என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது. அதற்கான ஒரு திட்டமே வடக்குக்குத் தனியாகவும் கிழக்குக்குத் தனியாகவும் சமஷ்டி அலகுகளை வழங்குவதென்ற சூழ்ச்சி!

இந்தத் திட்டத்தைத் தமிழர்கள் ஏகோபித்து எதிர்ப்பார்கள் என்பது பிரேமதாசாவுக்குத் தெரியும் அந்த எதிர்ப்பைத தனக்குச் சாதகமாக்கி, முதலில் தென் தமிழீழத்தை இராணுவ நடவடிக்கைகள் மூலம் முழுச் சிங்கள மாகாண மாக்கி சிங்களப் பேரினவாதத்தின் அபிமானத் தலைவனாக முடியும் என்று அவர் கணக்குப் போட்டிருக்கிறார்.

அந்தக் கணக்கின் ஒரு பகுதியே கிழக்கில் தரைவழித் தாக்குதலும வடக்கில் விமானத் தாக்குதலும் என்ற உத்தி. தென் தமிழீழத்தையும் ஏழோடு எட்டாகி விழுங்கிக் கொண்டால், வடக்கைத் தமிழர்களிடம் விட்டுவிட்டாலும் பரவாயில்லை என்ற எண்ணத் தோற்றமும் சிங்கள அரசியல் வட்டாரங்களில் நிலவுவதை மறந்துவிடமுடியாது.

முதலில் கிழக்கு, பின்னர் வடக்கு என்ற சூத்திரத்தை இராணுவத்தினர் ஆரம்பத்திலிருந்தே கடைப்பிடித்து வருவது தென் தமிழீழத்தை முழுமையான சிங்கள மாகாணமாக்க வேண்டும் என்ற எண்ணக் கருவின் வடிவமே அதனையே இப்போது புதிய உத்தி என்று கூறுகிறார்கள்; வேறொன்றுமில்லை.

### தமிழரும் ஈழத்தின் மூத்தகுடிகளே

# வடக்கு - கிழக்கு தாயகமானதாலேயே தமிழர் தனித்துவம் சிதையாதிருக்கின்றது

### கலாநிதி சிற்றம்பலம் கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், மார்ச். 16

தமிழர்கள் ஈழத்தின் மூத்த குடிகள் அல்லர் என்றும் சிங்களவரே ஆதிக் குடிகள் என்றும் வரலாற்றாளர்களே கூறிவந்தனர். அப்போது தமிழர்களை வரலாறு கைவிட்டு விட்டதோ என்று சந்தேகப்பட்டது உண்டு

ஆனால் கடந்த இரண்டு தசாப்தங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல், கல்வெட்டியல், மானிடவியல் மொழியியல், சமூகவியல், ஆய்வுகள் தமிழர்களும் இந்த நாட்டின் பண்டைய குடிமக்கள் என்பதை திட்டவட்டமாக நிருபித்துள்ளன. பல சான்றுகள் அதனை உறுதிப்படுத்தி உள்ளன.

இவ்வாறு தெரிவித்தார் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் கலாநிதி சி.க. சிற்றம்பலம்.

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்திய முழுநிலா நாள் அறிவியலரங்கில் கலந்து கொண்டு ''பண்டைய ஈழம்'' என்னும் பொருளில் பேசுகையிலேயே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. சு. டிவகலாலா தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெற்றது. காலநிதி சிற்றம்பலம் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்கள் ஈழத்தின் மூத்த குடிகள் என்பதற்குரிய தொல்லியற் சான்றுகள் அநுராதபுரம், திஸ்ஸமகாராம, புத்தளம், மன்னார், ஆனைக்கோட்டை, கந்தரோடை, வவுனியா ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் ஈழத்தாழிசளும் இவற்றுள் அடங்கும். தென்னிந்திய நாகரிகத்தின் படர்ச்சியின் விளைவாகவே ஈழத்தின் நாகரிகம் உருவாகியது என்பதை இத்தகைய சான்றுகள் உறுதி செய்துள்ளன. இவற்றுக்கும் தமிழ் நாட்டில் கிடைத்துள்ள தொல்லியற் சான்றுகளுக்குமிடையே நெருங்கிய ஒற்றுமை உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன், இச்சான்றுகள் ஈழத்தின் ஆதிவாசிகளெனப் பாளிநூல்கள் குறிப்பிடும் யக்ஷர் - நாகர் எனப்பட்ட கற்கால மக்களைத் தொடர்ந்து இங்கு வந்தவர்கள் தென்னிந்தியர்களே என்பதையும் இவர்கள் தமிழையும் தற்காலச் சிங்கள மொழியின் மூதாதை மொழியாகிய எலுவையும் பேசினர் என்பதும் உறுதியாகியுள்ளது.

#### சீகளவும் சிங்களமும்

பௌத்தத்தின் வருகையோடு தான் சிங்கள மக்கள் இலங்கைக்கு வந்தார்கள் என்ற ஐதிகக் கதைக்கு இலங்கையில் பழைய பெயரான 'சீகள' என்பதே அடிப்படையாக இருந்தது. இந்நாட்டின் பெயரே பின்னர் ''சிங்கள'' என மாறித் தற்காலச் சிங்கள இனத்தின் பெயராக வளர்ச்சி பெற இற்றைக்கு 2,200 ஆண்டுகளுக்கு முன்னர் இம்மதத்தின் வருகையோடு வந்த பாளி மொழியும் ஈழத்தில் வழக்கிலிருந்த சிங்கள மொழியின் மூதாதை மொழியாகிய எலு மொழியும் கலக்கச் சிங்கள மொழி உருவாகியது. இதனால் மதம், மொழி - இனம் என இரு வேறு கூறுகளாக சிங்கள - தமிழ்க் கலாசாரங்களாக ஈழததுக் கலாசாரம் பிரிந்தது.

நமது நாட்டின் பழைய தமிழ்ப் பெயரான ஈழத்தில் இருந்தே 'சிங்களம்' என்ற பெயர் மலர்ந்ததென்பதை பிரபல மொழியியலாளரான பேராசிரியர் பரோ எடுத்துக் காட்டியுள்ளார்.

மேலும், தமிழகத்தைப் போல் ஆதி ஈழத்தில் 'ஆய்', 'வேள்' போன்ற குறுநில மன்னர்களும் 'பெருமகன்' போன்ற நிலச் சுவாந்தவர்களும் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் ஈழம் முழுவதும் காணப்பட்டதை பிராமிக் கல்வெட்டுகள் எடுத்துக் கூறுகின்றன. இவ்வெழுத்து முறை தமிழகத்திலிருந்தே ஈழத்திற்கு வந்தது. இதன் பின்னர் பௌத்தத்துடன் வந்த வட இந்திய பிராமி வரி வடிவம் இதனை அமிழ்த்தியதோடு, தமிழ் வடிவங்களையும் அழித்து விட்டது.

இறுதியாக இந் நூற்றாண்டில் தமிழ் அறிஞர்களான ஞானப்பிரகாசர் போன்றோர் இவ்வொற்றுமை பற்றி குறிப்பிடும்போது அவர்களுக்கு இத்தகைய தொல்லியல் சான்றுகள் கிட்டவில்லை இதனால் அவர்கள் எள்ளிநகையாடப் பட்டனர். இவ்வாறே நாடாளுமன்றத்திலும் ஐம்பதுகளில் தமிழ்ப் பிரதிநிதிகள் பேசும்போது அவர்கள் 'கள்ளத் தோணிகள்' என எள்ளி நகையாடப்பட்டனர்.

#### தனி உறுதிக் காணி

ஆனால் இன்று கிடைக்கும் ஆதாரங்கள் சிங்கள மக்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்த தமிழ் மக்கள் அப் பகுதியில் தமிழ் தனித்துவத்தை இழக்க வட, கிழக்கு மாகாணங்களாகிய இன்லைய தமிழ்ப் பகுதிகளைத் தாயகமாகக் கொண்டதால்தான் அவர்களின் தனித்துவம் சிதையாதிருந்தது; சிதையாதிருக்கின்றது இது ''சொரியலில் தனி உறுதிக் காணியே சிறந்தது'' என்ற தமிழ் மக்களின் வரலாற்று அனுபவத்தையே உறுதி செய்கிறது. — என்று கூறினார்.

முழுநிலா நாள் அறிவியலரங்கில் வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ச. சத்தியசீலன் ''உலகின் சமகால செய்தித் தொகுப்பை'' வழங்கினார்.

(அ)

## இன்று

கொழும்புத்துறை மேற்கு மாதர் சங்கத்தின் ஏற்பாட்டில் அரியாலை கலைமகள் கலை, ஒளி நாடக மன்றத்தினர் வழங்கும் ''அரிச்சந்திர மயான காண்டம்'' இன்று இரவு 7-30 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெறும்.

(த-17)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் 13 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று மாலை 4 00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

(உ)

★ ★ ★

கொழும்புத்துறை, மார்ச் 16

கொழும்புத்துறை புனித சூசையப்பர் திருநாள், வருடாந்த உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5மணிக்கு ஆரம்பமாகிறது

மூன்று நாட்களுக்கு மாலை ஆராதனைகள் நடைபெறும். எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 5-30 மணிக்கு முதற் பூசைப் பலி ஒப்புக்கொடுப்பதுடன் விழா நிறைவுறும்.

(அ-30)

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும்— 11 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் பாஸ்கரன் விளையாட்டரங்கில் நடைபெறும்.

(உ-20-143)

★ ★ ★

ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஸ்கந்தா மைதானத்தில் நடத்தும் — லீக் முறையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் மோதும் அணிகள் வருமாறு:-

★ சில்வர்ஸ்ரார் அணி எதிர் வீனஸ் அணி

★ சத்தியா அணி எதிர் மாவத்தை அணி

(உ-89)

## பனையில் இருந்து விழுந்து மரணம்

வட்டுக்கோட்டை, மார்ச் 16

பனை மரத்தில் ஏறிய ஒருவர் தவறி விழுந்து மரணமானார். வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரிக்கு அருகில் உள்ள வளவொன்றில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

கள் எடுப்பதற்காக பனையில் ஏறியவர் தவறி விழுந்ததில் அவரது கழுத்து முறிந்து அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமானார் அராலி மத்தி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மாணிக்கம் கந்தசாமி என்ற 53 வயதுடையவரே மரணமானவர் ஆவார். (அ 161-12-28)

### உடற்பயிற்சிப்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரம் ரூபாவும், இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு ஆயிரத்து ஐநூறு ரூபாவும் மூன்றாம் இடத்தைப் பெறும் அணிக்கு ஆயிரம் ரூபாவும் வழங்கப் படுகின்றது.

இந்நிகழ்வின் தலைவராகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வி. சண்முகராசாவும் முதன்மை விருந்தினராக விடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு ஆர். சுந்தரலிங்கமும் கலந்து கொள்கிறார்கள். தமிழீழத் தேசியக் கொடி தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு வெ. இளங்குமரனால் ஏற்றி வைக்கப்படும் திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசில் வழங்குவார்.

பல கல்லூரி அணிகளின் ''பான்ட்'' வாத்திய அணி வகுப்பும் நாளை நடைபெறவிருக்கிறது. (உ)

### 7 வேங்கைகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழகன் அல்லது ஷாஜகான் (சந்தியாப்பிள்ளை ஜோன்சன் தாழ்வுப்பாடு, மன்னார்)

★ கடற்புலி லெப்டினன்ட் கலியுகன் அல்லது கலீம் (சச்சிதானந்தம் கிருஷ்ணகுமார் - அச்சுவேலி வடக்கு)

★ கடற்புலி லெப்டினன்ட் வெற்றி அல்லது குண்டன் (நடராஜா ... குடத்தனை) (உ-3)

## அம்பாறையிலுள்ள 24 முகாம்களும் "திறந்த வெளிச்" சிறைகளாக உள்ளன!

### தமிழ் அகதிகள் ஒன்றியம் ஜனாதிபதிக்கு மகஜர்

அம்பாறை மாவட்டத்தில் 24 அகதி முகாம்கள் இயங்கி வருகின்றன. இந்த முகாம்கள் அனைத்தும் ''திறந்த வெளிச் சிறைகள்'' போன்றே உள்ளன இதனால் தமிழ் மக்கள் அனுபவிக்கும் வேதனைகள் பலப்பல

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அனுப்பப்பட்டுள்ள மகஜர் ஒன்றில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

24 முகாம்களிலும் தங்கியிருக்கும் 5 ஆயிரத்து 475 அகதிக் குடும்பங்களை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துமாறு கோரி அகதிகள் ஒன்றியம் ஜனாதிபதிஆர், பிரேமதாசவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறது

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அகதி முகாம் களிலிருந்த போதிலும் எங்களுக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லை. இடையிடையே சுற்றி வளைக்கும் படையினர் அகதிகளாக இருப்பவர்களையே அழைத்துச் செல்லுகிறார்கள். விசாரணையின் பின்பு விடுதலை செய்கிறார்கள். சில சமயங்களில் எங்களைக் கொண்டே முகாமிலுள்ள வேலைகளைச் செய்கிறார்கள்.

கடந்த 32 மாதங்களாக இந்த முகாம்களில் இருக்கிறோம். எங்களை நன்கு பாதுகாப்புப் படையினருக்குத் தெரியும். இது தவிர முகாமுக்கு பொறுப்பான ஓர் அதிகாரி இருக்கிறார். அவரிடத்தில் எங்கள் பெயர், விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. அதன்படி உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன

அப்படியிருக்கும்போது ஏன் எங்களை மீண்டும் மீண்டும் சுற்றிவளைத்து முகாமுக்கு அழைத்துச் செல்லப்படுகிறது என்பது புரியாத புதிராகவே இருக்கிறது என மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

[ஒ-இ]

## பல்கலை கல்லூரி அனுமதி;

## விண்ணப்ப முடிவு திகதியை நீடிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச். 14

இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதிக்க கோரப்பட்டுள்ள விண்ணப்பங்களை அனுப்பும் முடிவு திகதியை நீடிக்க வேண்டும்.

இப்படியான அவசர கோரிக்கை ஒன்றை யாழ். அரச அதிபர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ளார்.

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்கள் தபால் மூலமாக எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிடம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும்—

விண்ணப்பங்கள் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டிருந்தது.

தற்போது நிலவும் சூழ்நிலையில் யாழ் மாவட்ட மாணவர்கள் விண்ணப்பங்களை பெறமுடியாதுள்ளதால், குறிப்பிட்ட அளவு விண்ணப்பப்படிவங்களை செயலகத்துக்கு அனுப்புமாறும் அரச அதிபர் கோரியுள்ளார்.

(த-3)

## யாழ். ஆஸ்பத்திரியில் மருந்துப் பற்றாக்குறை

யாழ்ப்பணம், மார்ச் 16

யாழ். போதனா வைத்திய சாலையில் மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சாதாரண மருந்து வகைகள் கூட மிகச் சொற்பமே கையிருப்பில் உள்ளதாகத் தெரியவருகிறது

காய்ச்சல் மற்றும் சகல வலிகளுக்கும் வழங்கப்படும் ''பனடோல்'' குளிகைகள் இல்லை. அதற்குப் பதிலாக வழங்கப்படும் அஸ்பிறின் பில்லைகளும் இரண்டு நாட்களுக்குப் போதுமானவையே வழங்கப்படுகின்றன.

மலேரியா நோய்க்குப் பயன்படுத்தப்படும் வேறு வகைக் குளிசைகள் முடிந்துவிட்டன. ''பிறிமாகுயின்'' மட்டுமே நோயாளருக்கு வழங்கப்படுகிறது அதுவும் மிகக் குறைந்த அளவே கையிருப்பில் உள்ளதாகச் சொல்லப்படுகிறது

நோய் கண்ட குழந்தைகளுக்கு வழங்கப்படும் பென்சிலின், பிறிற்றோன் போன்ற மருந்துப் பாணிகளும் முடிவடைந்துள்ளன. அவற்றுக்குப் பதிலாகக் குளிகைகள் விநியோகிக்கப் படுகின்றன

பலவகையான ''அன்ரி பயற்றிக்'' மற்றும் ''அன்ரி செப்ரிக்'' மருந்து வகைகளுக்கும் பெரும் பற்றாக்குறை நிலவுகிறது. (அ-15)

### தமிழ் மக்களை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும். இந்தப் பாதுகாப்பை நாம் உறுதிப்படுத்தியே தீருவோம்.

சிங்கள அரசின் இக்கொடூரப் படுகொலைகளை தடுத்து நிறுத்த மனிதாபிமானமுள்ள சிங்கள மக்களும், உலக சமுதாயமும் முன்வர வேண்டும்

இப் படுகொலைகளின்மூலம் தமிழ் மக்களைமுற்றாக அழிப்பதே சிங்களப் படையின் எண்ணமாக இருக்கிறது என்பதை நாம் தெளிவு படுத்துகின்றோம்

இவ்வாறான படுகொலைகளைப் புரிவதற்குக் காரணமாகச் சிங்கள அரசை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இத்தகைய படுகொலைகளை உடன் நிறுத்துமாறு சிங்கள அரசுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா சவுந்தரம்

காரைநகர் அறுகப்புலத்தைச் சேர்ந்த திருமதி கந்தையா சவுந்தரம் மட்டக்களப்பில் 14-3-93 இல் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் கந்தையாவின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி, செல்லம்மா, டாக்டர் ஏரம்பு (யாழ். போதனா வைத்தியசாலை), பாக்கியம், செல்வரத்தினம் (பெருந்தெருக்கள் திணைக்களம், மட்டக்களப்பு), நடராசா, நல்லம்மா, சுந்தரமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராசையா (ஓவசியர் P.W.D), காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் திரேசம்மா, சிவலிங்கம், சரஸ்வதி, ஈஸ்வரி, கனகலட்சுமி, ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவகுமாரன் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), குணரத்தினம் (தேசிய நீர்வழங்கல் வடிகால் அபிவிருத்திச் சபை, திருகோணமலை), சிவபாலன், சிவகணேசன், வைத்திய கலாநிதி சந்திரசேகரம் (அரசினர் வைத்தியசாலை, நீர்கொழும்பு), வைத்திய கலாநிதி இராசசேகரம் (போதனா வைத்தியசாலை, கொழும்பு), குகசேகரம், ரதிதேவி (ஆசிரியை, ஓமந்தை மகாவித்தியாலயம்), தெய்வேந்திரன், சர்வேஸ்வரன், நகுலேஸ்வரி, தவராணி, சியாமளா, அருள்ரூபன், தயாளினி, யசோதா, கோசலா, சுரேஸ்குமார், சுகந்தகுமார் ஆகியோரின் பேத்தியாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (16-3-93) செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு ஆரையம்பதி மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் க. ஏரம்பு
(மகன்)

126, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(24856)

## திருமதி
## செல்லம்மா செல்லத்துரை

உரும்பராய் தெற்கைச் சேர்ந்த திருமதி செல்லம்மா செல்தத்துரை அவர்கள் 15-03-93 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செ. செல்வத்துரையின் அன்பு மனைவியும், திருமதி இராசரத்தினம் கண்மணி, திரு. சிவலிங்கம் (கனடா), திரு. செ. பத்மநாதன், திருமதி லோ. சத்தியேஸ்வரி (நியூஸிலாந்து), திருமதி ஏகாம்பரதேவி கனகசபாரத்தினம், திருமதி பஞ்சாநந்தன் பரம்சோதி, திரு. செ. கமலநாதன் (ஜெர்மனி), திருமதி பாலதேவன் சாந்தினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. ச. இராசரத்தினம், திருமதி சி. தனவதி (கனடா), திருமதி ப. புனிதவதி, காலஞ்சென்ற லோகேஸ்வரன், திரு. இ. கனகசபாரத்தினம், திரு. பஞ்சாநந்தன், திருமதி க. பாமினி (ஜெர்மனி), திரு. பாலதேவன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 16-03-93 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு அச்செழுவில் திருமதி சாந்தினி தேவியின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் அச்செழு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
இ. கனகசபாரத்தினம்
(மருமகன்)

அச்செழு.
(24857)

## திருமதி சின்னையா பவளம்மா

சாவகச்சேரி பிரசித்த நொத்தாரிஸ், மொழி பெயர்ப்பாளர், முன்னாள் சாவகச்சேரி பட்டினசபை உபதலைவர், இத்தியடிப்பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா, சின்னையாவின் அன்பு மனைவி பவளம்மா 15-3-93 பகல் 11 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் வல்லிபுரநாதன் (ஆசிரியர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இராமநாதன் (கனடா ரொறன்ரோ எஞ்சினியர்), யோகராசா (படவரைஞர் நீர்பாசன திணைக்களம்), விஸ்வநாதன் (நிலஅளவையாளர், நில அளவை திணைக்களம்), கிருஷ்ணநாதன் (கணக்காளர் நைஜீரியா), சண்முகநாதன் (எஞ்சினியர் சிங்கப்பூர்), சோதிநாதன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), பாலநாதன் (நீர்வளசபை தொழில் நுட்ப உத்தியோகத்தர்), கருணைநாதன் (காரியால உத்தியோகத்தர் இலண்டன்), குகநாதன் (கொம்பியூற்றர் இயக்குநர் இலண்டன்). சந்திரலேகா, பாக்கியலட்சுமி (ஆயுள் வேத டாக்ரர்), சுமங்களராணி (பட்டதாரி ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கெங்காதரன், கீதா, நிரஞ்சன் தினேஸ், குமுதா, கவிதா, சிகப்பிரகாஸ், சகிலா, தர்மிளா, புவிராஜன், இலக்ஸ்மன், தர்சனா, நிசாந்தன், தனுசா, கிருபாகரன், சிறீபிரகாஸ், ஜெயபிரகாஸ், ராஸ்பிரகாஸ், சம்யுதா, அபிராமி, பிரியதர்சன் ஆகியோரின் பேத்தியும், ஞானேஸ்வரி, பராசத்தி, காஞ்சனா, மங்களேஸ்வரி, வடிவழகி, அமிர்தவள்ளி, கல்பனா, சுகந்தா, ஈஸ்வரதாசன், சத்திதாசன், முத்து ரமணிதரன் ஆகியோரின் மாமியும், சிவபாக்கியம், நித்தியலட்சுமி, திருநாவுக்கரசசாமி, நல்லம்மா, தம்பியையா, துரைசாமி, சிவயோகம் ஆகியோரின் சகோதரியும், கனகசபை, துரையம்மா ஆகியோரின் புதல்வியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (16-3-93) பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனஞ் செய்யப்படும் உற்றார், உறவினர், நண்பர்கள், நலன் விரும்பியோர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஸ.சின்னையா
(கணவன்)

"சிவபதி"
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(24858)

### பம்பாய் குண்டு வெடிப்புகள்:

# சீக்கிய போராளிக் குழு உரிமை கோருகின்றது

புதுடில்லி, மார்ச் 16

பம்பாயில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு தாமே காரணம் என்று சீக்கியப் போராளிக் குழு ஒன்று உரிமை கோரியுள்ளது.

மத்திய அரசுக்கும் மற்றும் பஞ்சாப் மாநில அரசுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் காலிஸ்தான் கொமாண்டோ போராளி அமைப்பே இக்குண்டுகளை வைத்ததாக அந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவர் பி.ரி.ஐ. செய்தி ஸ்தாபனத்துக்குத் தெரிவித்தார்.

பஞ்சாபில் உள்ள போராளிக் குழுக்களில் காலிஸ்தான் கொமாண்டோ அமைப்பே இதுவரை கார்க்குண்டுத் தாக்குதல்களை நடத்தி வந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

# தமிழக அகதி முகாம்களில் சனியிரவு திடீர் சோதனை

சென்னை, மார்ச் 16

பம்பாய்க் குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமை இரவு பொலிஸார் தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியுள்ள முகாம்களில் திடீர் சோதனைகளை நடத்தினார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கோவை மாவட்டத்தில் பதினொரு முகாம்களிலும் — பெரியார் மாவட்டத்தில் ஏழு முகாம்களிலும் இத் திடீர்ச் சோதனை நடத்தப்பட்டது.

முகாம்களில் அகதிகள் அனைவரும் தங்கி இருக்கிறார்களா, வெளியார் யாரேனும் தங்கியுள்ளார்களா என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவே இச்சோதனைகள் நடத்தப்பட்டன என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். (த-எ)

# முஸ்லீம் சகோதரர்கள் இருவர் மீது சந்தேகம்

பம்பாய் குண்டு வெடிப்புகளின் பின்னணியில் முஸ்லிம் சகோதரர்கள் இருவர் இருந்ததாக இந்தியப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் பொலிஸார் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி இரு சந்தேக நபர்களுக்கும் சொந்தமானது எனக் கருதப்படும் வாகனம் ஒன்று ரைபிள்கள் கைக்குண்டுகள் மற்றும் ஆயுதங்களுடன் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்ற — கடந்த வெள்ளியன்று — பிரஸ்தாப இரு சந்தேக நபர்களும் பம்பாயில் தங்கியிருந்த வீட்டில் இருந்து, சந்தேகத்துக்கு இடமான வகையில் சில பொதிகள் வாகனங்களில் ஏற்றப்பட்டதை அப்பகுதி மக்கள் கண்டிருக்கின்றனர்.

பொதிகள் ஏற்றப்பட்ட சமயம் அந்தச் சந்தேக நபர்கள் இருவரும் அங்கு நின்றனர் என்றும் —

குண்டு வெடிப்புச் சம்பவத்தின் பின்னர் அவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது

குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு சில நாட்களுக்கு முன்னரே மேற்படி இரு சந்தேக நபர்களின் உறவினர்கள் அந்த வீட்டிலிருந்து வெளியேறி விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-6)

# குண்டுகள் பொருத்தப்பட்ட மேலும் 2 ஸ்கூட்டர்கள் மீட்பு

புதுடில்லி, மார்ச் 16

தெற்கு பம்பாய் நகர்ப் பகுதியில் — தங்க ஆபரணக் கடைகள் அமைந்திருக்கும் பிரதேசத்தில் — குண்டுகள் பொருத்தப்பட்ட நிலையில் இரு ஸ்கூட்டர்கள் நேற்று கண்டுபிடிக்கப்பட்டன.

அநாதரவான நிலையில் விடப்பட்டிருந்த இந்த ஸ்கூட்டரில் பொருத்தப்பட்டிருந்த குண்டுகள் நிபுணர்களினால் செயலிழக்கச் செய்யப்பட்டன.

இக்குண்டுகள் வெடித்திருந்தால் பெரும் அனர்த்தம் ஏற்பட்டிருக்கும் எனக் கருத்து வெளியிடப்பட்டது.

நேற்று முன்தினம் குண்டுகள் பொருத்தப்பட்ட நிலையில் ஸ்கூட்டர் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது தெரிந்ததே.

### காணாமற்போன மாணவர்

# ஆட்கொணர்வு மனுக்கள் நீதிமன்றில் விசாரணை!

எம்பிலிப்பிட்டியாவில் 1989 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டுப் பின்னர் காணாமற்போனதாகக் கூறப்படும் 14 பாடசாலை மாணவர்கள் மற்றும் ஓர் இளைஞர் சார்பாக அவர்களின் பெற்றோர் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுக்கள் கடந்த புதன்கிழமை மேன்முறையீட்டு நீதிபதி ஆனந்த எம்பெரோரா முன்னிலையில் விசாரணைக்கு வந்தன.

இம்மனுக்கள் குறித்து விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி மேன்முறையீட்டு நீதிபதி கொழும்பு மாவட்ட பிரதம நீதிவானுக்கு உத்தரவிட்டார்.

இம்மனுக்களில் பிரதிவாதிகளாக எம்பிலிபிட்டியா செவன இராணுவ முகாம் பொறுப்பதிகாரி பிரிகேடியர். ஆர். பி. லியனகே, எம்பிலிப்பிட்டியா மத்திய கல்லூரி அதிபர் தயானந்த கலபதி, அதிபரின் மகன் சமறாகலபதி, இராணுவத் தளபதி, சட்டமா அதிபர் ஆகியோர் காட்டப்பட்டுள்ளனர். (த-எ)

# இலங்கையரிடம் 'பிரவுண் சுகர்' கைப்பற்றப்பட்டது

திருச்சியில் இலங்கை தம்பதியினரிடம் இருந்து ஒன்றரை லட்சம் ரூபா மதிப்புள்ள 'பிரவுண் சுகர்' எனப்படும் போதைப் பொருளை பொலிஸார் கைப்பற்றினார்கள்.

அந்த இலங்கை தம்பதியினார் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (த-எ)

# தமிழகத்தில் கட்சித் தாவல்: - காங்கிரஸ் தூண்டுகிறதாம்

தமிழ்நாட்டில் கட்சித் தாவலைத் தூண்டுவதற்கு காங்கிரஸ் கட்சி முயற்சித்து வருகிறது.

பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலாளர் எஸ். கோவிந்தாச்சார்யா பெங்களூரில் செய்தியாளர்களிடம் இத்தகவலை தெரிவித்தார்.

அ.தி.மு.க. அரசை கலைக்கப்போவதாக காங்கிரஸ் கட்சி மிரட்டி வருகின்றது.

தீவிரவாதம், பிரிவினைவாதம், சிறுபான்மையினர் போன்ற பிரச்சினைகளில் பாரதிய ஜனதாக் கட்சிக்கும் அ.தி.மு.கவுக்கும் இடையே கருத்தொற்றுமை இருக்கிறது. இரு கட்சிகளுக்கும் இடையே உடன்பாடு ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது.

— இவ்வாறு திரு. கோவிந்தாச்சாரியா சொன்னார்.

# அ.தி.மு.க. அரசாங்கத்தை கலைப்பதற்கு முயற்சி?

கல்கத்தா, மார்ச் 16

தமிழகத்தில் அ.தி.மு.க அரசாங்கத்தை ஏதாவது காரணம் காட்டி, கலைத்துவிட காங்கிரஸ் கட்சியும் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியின் தலைமையிலான ஜனதா கட்சியும் முயற்சித்து வருகின்றன.

பாரதீய ஜனதாக் கட்சியின் அனைத்திந்திய பொதுச் செயலாளர் ஜே. பீ. மாத்தூர் நேற்று கல்கத்தாவில் செய்தியாளரிடம் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

உ

## சிவாசார்ய அபிஷேக அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் ஆங்கீரச வருடம் பங்குனி மாதம் 5ஆம் திகதி (18 - 03 - 1993) வியாழக்கிழமை காலை 6-42 — 7-42 வரையுள்ள மீனலக்ன சுபமுகூர்த்தத்தில் நாகர் கோவில் ஸ்ரீநாகதம்பிரான் ஆலய பிரதம அர்ச்சகர்

பிரம்மஸ்ரீ கணபதிசாமி குருக்கள்

**சிவசண்முக சர்மா** அவர்களுக்கு

அவரது வித்யாகுரு ''சிவாகம ஞானபாஸ்கரன்''

சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்

அவர்கள்

விஷேச தீட்சைகளையும் ஆசார்யாபிஷேகத்தையும் மேற்படி ஆலயத்தில் வைத்து நடாத்தி வைப்பார்கள். அத்தருணம் அன்பர்கள், அடியார்கள் எல்லோரும் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
திருமதி விசாலாட்சியம்மா.

நா. ஆ. பரிபாலன சபையினர்.

(6046)

## அறிவித்தல்

நேற்றைய (15-03-1993) உதயன் தினசரியில் வெளியான காசிப்பிள்ளை விநாயகமூர்த்தி என்பவருடைய மரண அறிவித்தலில் எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கும் அந்த குடும்பத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை எனது நண்பர்களுக்கு அறியத் தருகின்றேன்.

பொன். பூலோகசிங்கம்,
சட்டத்தரணி.

(24853)

## மரண அறிவித்தல்

### திருமதி றேயினா கிறிஸ்தோஸ்தம்

திருமதி றேயினா கிறிஸ்தோஸ்தம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மரியாம்பிள்ளை, றோசம்மாவின் அன்பு மகளும், சூசைப்பிள்ளை கிறிஸ்தோஸ்தம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி இராசேஸ்வரி, திருமதி சறோஸா, எலமோ, வசந்தன், றேமன், திருமதி பிரியாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், வில்லியம், ஆனந்தராசா, எலில். விஜி, சாந்தி, லக்ஷி ஆகியோரின் அன்பு மாமியாரும். காலம் சென்ற B. M. சவிரிமுத்து, காலம் சென்ற B. M. அந்தோனிப்பிள்ளை, டெஸ்ஸி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று (16-03-1993) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சூ. கிறிஸ்தோஸ்தம் (கணவன்)

45, பழைய பூங்கா வீதி.
யாழ்ப்பாணம்.

(24854)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 16-03-1993இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org